**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை- 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 08.07.2025**

**முன்னிலை**
**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**
*****

**வழக்கு எண்கள். CP 2739/விசாரணை/E/2023**

திரு சு.ராமர் . மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
போடிநாயக்கனூர் வட்டம், தேனி மாவட்டம்

******

**ஆணை**

1) இவ்வாணையத்தின் 16.05.2025 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து போடிநாயக்கனூர் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு சு.முத்துக்குமார் இவ்வாணையத்தில் 08.07.2025 அன்று ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2) அந்த அறிக்கையில், இவ்வாணையத்தின் உத்தரவுபடி, மனுதாரர் கோரும் 1715/2013/அ2 என்ற எண் கொண்ட கோப்பு எங்கேவுள்ளது, அது காணாமல் போனதற்கு யார் காரணம் என்பது குறித்து அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்கள் திரு பாலமுருகன், திருமதி உதயசண்முகா மற்றும் திரு ராமராஜ் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டதாகவும், அவர்கள் அளித்துள்ள வாக்குமூலத்தில், மேற்படி கோப்பு முடிவுற்ற பின்னர், போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலகத்தின் பதிவறையில் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்றும் தற்போது தேடிப்பார்க்கையில், அக்கோப்பு கிடைக்கப் பெறவில்லை என்று பதிவறை எழுத்தர் தெரிவித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

3) போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 09.09.2010 முதல் 25.04.2017 வரையில் பணியாற்றிய பதிவுரு எழுத்தர் திரு பாலு என்பவர் தான் கோப்பு காணாமல் போனதற்கு முழுப் பொறுப்பாவார் என்றும் அவர் 26.01.22024 அன்று இறந்து விட்டார் என்றும் உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை கவனமாக பரிசீலித்த இவ்வாணையம் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறது:-

i. **மனுதாரர் குறிப்பிடும் 1715/2013/அ2 என்ற எண் கொண்ட கோப்பு நிரந்தரமாக பராமரிக்கப்பட வேண்டிய கோப்பாகும். ஆகவே, பதிவறை எழுத்தராக பணிபுரிந்த திரு பாலு என்பவர்தான் மனுதாரர் குறிப்பிடும் கோப்பு காணாமல்**

போனதற்கு முழுப் பொறுப்பாவார் என்றும் அவர் இறந்துவிட்டதால், அந்த கோப்பு கிடைக்கப் பெறவில்லையென உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அளித்துள்ள அறிக்கையை இவ்வாணையம் ஏற்கவில்லை. ஆகவே, மனுதாரர் குறிப்பிடும் 1715/2013/அ2 என்ற அந்தக் கோப்பை உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் மறுகட்டமைத்து அதிலுள்ள விவரங்களை மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக **08.09.2025** அன்று இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மூலம் சமர்ப்பிக்க வேண்டுமென்று இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

ii. மேற்படி கோப்பை மறுகட்டமைக்க முடியவில்லை என்றால், மனுதாரர் கோரும் 1715/2013/அ2 என்ற அந்த கோப்பு காணாமல் போனதற்கு யார் பொறுப்பு என்பதை உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் விசாரித்து அது குறித்த அறிக்கையை இவ்வாணையத்தின் முன்பாக **08.09.2025** அன்று இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மூலம் சமர்ப்பிக்க வேண்டுமென்று இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். CP 2739/விசாரணை/E/2023</u>
<u>பெறுநர்</u>

பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
போடிநாயக்கனூர் வட்டம், தேனி மாவட்டம்

வருவாய் கோட்டாட்சியர், உத்தமபாளையம் வட்டம்,

திரு சு.இராமர் த/பெ சுப்பையா, பழங்குடி குறும்பர் தெரு,
கெப்புரெங்கன்பட்டி, பூதிப்புரம் அஞ்சல், போடிநாயக்கனூர் - 625 531 தேனி மாவட்டம்

Copy to File
CR/PA